# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 498/2016

ஆணை எண். 132/2016

நாள் : 02/08/2016

ஜூன் திங்கள், 3 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி

– முறையீட்டு மனுதாரர்

196 (மற்றும்) 199 –வது வார்டு
மாமன்ற உறுப்பினர்கள்
மண்டலம் – 15,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 119.

– எதிர் மனுதாரர்

03.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் சென்னை மாநகராட்சி, சோழிங்க நல்லூர் மண்டலம், 196 (மற்றும்) 199–வது வார்டு மாமன்ற உறுப்பபினர்கள் குறித்து வெளியான செய்திகளை "பொதுப்பணியாளர்" மீதான குற்றச்சாட்டு என இம்முறைமன்ற நடுவம் கருதியதை தொடர்ந்து, 498/2016 எண்ணிட்ட அசல் மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. குற்றச் சாட்டுகள் குறித்து விராரணை மேற்கொண்டு இம்முறைமன்ற நடுவம் கீழ்காணும் ஆணைகளை வெளியிடுகிறது.

## ஆணை

சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம் 196–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி. அண்ணாமலை மற்றும் 199–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கே. கண்ணன் ஆகியோர் மீது துப்புரவு பணியாளர்கள் முறையே நீலாங்கரை மற்றும் கானாத்தூர் காவல் நிலையங்களில் புகார் செய்தது குறித்து இம்முறைமன்ற நடுவம் விசாரிக்க நேர்ந்தது. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் பிரிவு 2(v)–ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேற்படி மன்ற உறுப்பினர்கள் தாங்களாக கடைபிடிக்க வேண்டிய தான நேர்மை விதிமுறைகள் மற்றும் நன்னடத்தைக்கு இணங்கிய வகையில் செயல்படுவதற்கு தவறியதால் அவர்களது நடத்தை குற்றச்சாட்டு எனக் கருதப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், செங்கொடி சங்கச் செயலாளர் திரு. திருமால் இராவ் அவர்களை, 196–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. அண்ணாமலை தகாத வார்த்தைகளால் திட்டியதால் நீலாங்கரை காவல் நிலையத்திலும், துப்புரவு பணியாளர்களை தரக்குறைவாக பேசியதைத் தொடர்ந்து, 199–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கே. கண்ணன் மீது கானாத்தூர் காவல் நிலையத்திலும் புகார் செய்யப்பட்டு CSR பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிய நேர்ந்தது.

காவல்நிலையங்களில் மேற்படி மாமன்ற உறுப்பினர்கள் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளதால் தன்னால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என 15–வது மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்படி நிகழ்வுகள் தினமலர் நாளிதழில் வெளியான செய்தியை உறுதி செய்கின்றன.

மாநகராட்சியில் சுகாதாரப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் மிகவும் அடித்தட்டு மக்கள். எனினும் அவர்கள் பொதுமக்களுக்கு இன்றியமையாத சேவையை செய்து வருகின்றனர். சுகாதார சேவையில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு சேவை செய்து வரும் சுகாதாரப் பணியாளர்களை கண்ணியத்துடன் நடத்துவதுதான் பொதுமக்கள் பிரதிநிதிகளின் தலையாய கடமை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் இதற்கு முன் உதாரணமாக திகழவேண்டுமேயொழிய, அவர்கள் நன்னடத்தை தவறி நடந்து கொள்வது, காவல்துறையின் நடவடிக்கைக்கு உட்படுவது தாங்கள் வகித்து வரும் பதவிக்கு அழகல்ல. சுகாதாரப் பணியாளர்களை கண்ணியத்துடன் நடத்துவதில் மாமன்ற உறுப்பினர்கள் முன் உதாரணமாக திகழ வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

இந்நேர்வில் சம்பந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் மீது காவல் நிலையங்களில் புகார் செய்யப்பட்டுள்ள நிலையில் இணையான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுவதற்கு இம்முறைமன்ற நடுவம் விரும்பவில்லை எனினும் வருங்காலங்களில் இதுபோன்ற புகார்களுக்கு மாமன்ற உறுப்பினர்கள் உட்படலாகாது என தெரிவித்து இந்நேர்வின் மீதான மேல்நடவடிக்கையை முடித்து வைத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

திரு. வி. அண்ணாமலை,
196–வது மாமன்ற உறுப்பினர்,
பொன்னியம்மன் கோயில் தெரு,
ஈஞ்சம்பாக்கம், சென்னை – 115.
திரு கே. கண்ணன்,
199–வது வார்டு மாமன்ற உறுப்பினர்,
செங்காளியம்மன் கோயில் தெரு,
உத்தண்டி, சென்னை –119.

மண்டல அலுவலர்,
மண்டலம் –15,
சோழிங்கநல்லூர், சென்னை –119.
சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் தொடர்பு கொண்டு இறுதி
நடவடிக்கை நிலை தெரிவிக்கவேண்டும்

நகல்

சம்பந்தப்பட்ட காவல் துணை ஆய்வாளர்.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.